**<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.</u>**
**<u>தமிழக அரசின் விளையாட்டு விடுதிகளுக்கு 02.05.2017 பாளை அண்ணா விளையாட்டரங்கில் தேர்வு செய்திக்குறிப்பு</u>**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் இளைஞர் நலத் துறையின் கீழ் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் புரிவதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய 23 விளையாட்டு விடுதிகள் மற்றும் 5 விளையாட்டுப் பள்ளிகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**<u>மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி</u>**– மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், என்.எல்.சி. பள்ளி – நெய்வேலி, அரசு மேல்நிலைப்பள்ளி–புதூர்– சென்னை, செல்வம் மேல்நிலைப்பள்ளி– நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**<u>மாணவியருக்கான விளையாட்டு விடுதி</u>**– ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், நாகர்கோவில், பெரம்பலூர், தேனி, புதுக்கோட்டை, தருமபுரி, நேரு உள்விளையாட்டரங்கம் – சென்னை, பாரதி வித்யாபவன்–திண்டல்–ஈரோடு, செல்வம் மேனிலைப்பள்ளி – நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணும் விளையாட்டு விடுதிகளில் 2016 – 2017 ஆம் ஆண்டில் சேர்ந்து பயற்சி பெறுவதற்காக விளையாட்டுத் துறை சார்பாக இலவசமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது. விண்ணப்பங்களை **<u>மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலகம், St. தாமஸ் ரோடு, அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை – 627 002. என்ற முகவரியில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.</u>**

இந்த விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்கு 7 –ம் வகுப்பு, 8 – ம் வகுப்பு, 9 – ம் வகுப்பு மற்றும்11 –ம் வகுப்பு சேர்க்கைக்கான **மாவட்ட அளவிலான தேர்வு 02.05.2017 அன்று பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில்** வைத்து நடைபெற உள்ளது.

**<u>மாணவர்</u>**

1.தடகளம், 2. இறகுப்பந்து, 3. கூடைப்பந்து, 4. குத்துச்சண்டை, 5. கிரிக்கெட், 6. கால்பந்து, 7. வாள்சண்டை, 8. ஜிம்னாஸ்டிக்ஸ், 9.கைப்பந்து, 10. ஹாக்கி,11. நீச்சல், 12. டேக்வாண்டோ, 13. வாலிபால், 14. பளுதூக்குதல், 15.கபாடி, 16. மேசைப்பந்து, 17. டென்னிஸ், 18. ஜீடோ, 19. ஸ்குவாஷ் மற்றும் 20. வில்வித்தை.

**<u>மாணவியர்</u>**

1.தடகளம், 2. இறகுப்பந்து, 3. கூடைப்பந்து, 4. குத்துச்சண்டை, 5. கால்பந்து, 6. வாள்சண்டை, 7. கைப்பந்து, 8. ஹாக்கி, 9. நீச்சல், 10. டேக்வாண்டோ, 11. வாலிபால், 12. பளுதூக்குதல், 13. கபாடி, 14. டென்னிஸ் மற்றும் 15. ஜீடோ.

மேலும் விவரங்களுக்கு 0462–2572632 & 0462–2582632 என்ற எண்களில் அலுவலக நேரத்தில் தொடர்புக் கொள்ளவும்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கு மட்டும் இத்தேர்வு நடைபெறவுள்ளது. விளையாட்டு விடுதிக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தவர்கள் வருகிற 02.05.2017 அன்று காலை 7.30 மணிக்கு ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் **முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள்** தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.